**IN THE COURT OF THE DISTRICT MUNSIF,**
**Present: Miss.D.V.Koperundevi, B.Com., LLB., (Hons),**
**District Munsif, Arni.**
**O.S.66/2010**

2026=ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 18ம் நாள் புதன்கிழமை வாதி தரப்பு சாட்சியின் சாட்சியம். உறுதிமொழிச்சட்டம் 1969, பிரிவு 3=ன் படி என்னால் ஆணையிடப்பட்டு, சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறது.

**P.W.2 புவனேஸ்வரி, வயது 42, க/பெ கார்த்திக்**

**நேரம் - 12.05**

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி (பிரதிவாதிகள் 4 மற்றும் 9 தரப்பு)**

என்னிடம் காண்பிக்கப்படும் வா.சா.ஆ.1 பாக்கியம்மாளிடமிருந்து சோமசுந்தரம் கிரையம் பெற்ற கிரைய பத்திரம் என்றால் சரிதான். மேற்படி ஆவணத்தின்படி சொத்து விவரத்தில் குறிப்பிட்டுள்ளபடி சர்வே எண்.127/1ல் தெற்கு பக்கத்தில் 1 ஏக்கர் கிரையம் பெற்றார்கள் என்றால் சரிதான். மேற்படி தெற்கு பக்கத்தில் உள்ள 1 ஏக்கர் சோமசுந்தரத்திற்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான். மேற்படி சோமசுந்தரம் தான் தெற்கு பக்கத்தில் உள்ள 1 ஏக்கரை ஆண்டு அனுபவித்து வந்தார் என்றால் சரியல்ல. ஆகையால் தெற்கு பக்கத்தில் உள்ள 1 ஏக்கர் எனக்கு மற்றும் என் உடன் பிறந்தவர் யாருக்கும் உரிமையில்லை என்றால் சரியல்ல.

2. என்னிடம் காண்பிக்கப்படும் வா.சா.ஆ.3 மற்றும் வா.சா.ஆ.4 ஆவணங்கள் முனுசாமி முதலியார் பெயரில் உள்ள பட்டா என்றால் சரிதான். மேற்படி பட்டாவில் தெற்கு பக்கம் 1 ஏக்கர் சோமசுந்தர முதலியாருக்கு பாத்தியப்பட்டது என்றாலும், அவர் பெயர் மேற்படி பட்டாவில் விடுப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. என்னிடம் காண்பிக்கப்படும் வா.சா.ஆ.14 என் அப்பா முனுசாமி முதலியார் என் தாயாருக்கும், சகோதரர் செல்வத்திற்கும் எழுதிக் கொடுத்த உயில் பத்திரம் என்றால் என் தாயார் மற்றும் செல்வம் மற்றும் ராஜகுமாரிக்கும் எழுதிக் கொடுத்ததாகும். மேற்படி வா.சா.ஆ.14ஐ நான் படித்து பார்த்துள்ளேனா என்றால் படித்து பார்த்துள்ளேன். மேற்படி பத்திரத்தில் ராஜகுமாரி பெயர் இடம் பெற்றுள்ளதா என்று சாட்சியிடம் ஆவணத்தை காட்டி கேட்ட போது, சாட்சி ஆவணத்தை பார்த்து விட்டு ராஜகுமாரி பெயர் மற்றும் புவனேஸ்வரி பெயர் உள்ளது என்று கூறினார்.

3. மேற்படி உயில் சாசனம் பட்டா எண்.631படி பாத்தியப்பட்டது என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். என் தந்தைக்கும், என் பெரியப்பா குப்புசாமிக்கும் ஏற்பட்ட பாகப்பிரிவினை பற்றி மேற்படி வா.சா.ஆ.14ல் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். மேற்படி உயில் சாசன ஆவணத்தில் 2 அட்டவணை சொத்துக்கள் (A, B ) என உள்ளது என்றால் சரிதான். 'அ' அட்டவணை சொத்து தென் புறம் பொதுவில் பாதி மற்றும் 'ஆ' அட்டவணை சொத்து வடபுறம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

பாகப்பிரிவினையில் தென்புற சொத்து என் பெரியப்பாவிற்கு ஒதுக்கப்பட்ட சொத்து என்பதால் அது என் தந்தைக்கு பாத்தியப்பட்ட சொத்து இல்லை என்றாலும், அவர் வா.சா.ஆ.14 ஆவணத்தை ஏற்படுத்தியது செல்லாது என்றால் முதலில் பாகப்பிரிவினை என் தந்தை மற்றும் பெரியப்பாவிற்கு ஏற்பட்டது. ஆகையால் வா.சா.ஆ.14படி நான் எந்த உரிமையும் கோர முடியாது என்றால் சரியல்ல.

4. அதேப்போல் என் தந்தை தென்புறம் பக்கத்தில் சுவாதீனம் இருந்தார் என்பது பொய் என்றாலும், அவர் சுவாதீனம் தென்புறத்தில் இல்லை என்றால் சரியல்ல. பட்டா எண்.631 பட்டாவில் சோமசுந்தரம் முதலியார் பெயர் விடுபட்டுள்ளதால் என் தந்தையே சொத்துக்கு முழு உரிமை கோருகிறார் என்றால் சரியல்ல. என்னிடம் காண்பிக்கப்படும் வா.சா.ஆ,17 வழக்கு சொத்திற்கான பசலி வட்டாட்சியர் அலுவலகத்திலிருந்து பெறப்பட்டது என்றால் சாட்சி ஆவணத்தை பார்த்து விட்டு சரிதான் என்று கூறினார். வழக்கு சொத்து சர்வே எண் குறிப்பிட்டு மற்றும் விஸ்தீரணம் குறிப்பிட்டு முனுசாமி, சோமசுந்தரம் முதலியார் பெயர் உள்ளது என்றால் சரியல்ல, அவர் இறந்த பிறகு அவர்களே பட்டாவில் பெயர்களை சேர்த்துள்ளார்கள்.

5. மேற்படி முனுசாமி, சோமசுந்தரம் முதலியார் இருவரும் அனுபவத்தில் இருந்து வந்ததால்தான் அடங்கலில் அவர்கள் பெயரை வட்டாட்சியர் அலுவலகத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல, சோமசுந்தர முதலியார் அனுபவத்தில் இல்லை. மேற்படி வா.சா.ஆ.17ல் முனுசாமி மற்றும் சோமசுந்தரம் பெயர் உள்ளதா எனறு சாட்சியிடம் ஆவணத்தை காட்டி கேட்ட போது சாட்சி ஆவணத்தை பார்த்து விட்டு சரிதான், சோமசுந்தரம் இறந்த பிறகு அவர் பெயர் சேர்க்கப்பட்டுள்ளது. சோமசுந்தரத்தின் மகன்தான் 1ம் பிரதிவாதி அருள் நம்பிராஜன் என்றால் சரிதான்.

6. 1ம் பிரதிவாதி வா.சா.ஆ.14ல் தன் தந்தையின் பெயர் விடுபட்டுள்ளதால் அதை சேர்க்க வேண்டி மாவட்ட வருவாய் அலுவலரிடம் மனு கொடுத்தார் என்றால் சரிதான். அதன் பேரில் மாவட்ட வருவாய் அலுவலர் 1ம் பிரதிவாதியின் தந்தை பெயரை சேர்க்க 08.12.2009ல் உத்தரவிட்டார் என்றால் சரிதான். மேற்படி உத்தரவிற்கு நாங்கள் மேல்முறையீடு ஏதும் செய்யவில்லை என்றால் சரியல்ல, செய்துள்ளோம். மேல்முறையீடு எங்கு, எப்போது, யார் செய்தோம் என்றால் திருவண்ணாமலை மாவட்ட ஆட்சியரிடம், என் தந்தை கொடுத்தார், வருடம் எனக்கு நினைவில்லை. மேற்படி விவரங்களை என்னுடைய வழக்கு வாதுரை மற்றும் பிரமாண வாக்குமூலத்தில் குறிப்பிட்டு சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன்.

7. இவ்வழக்கில் உள்ள தென்புறம் பகுதி சோமசுந்தர முதலியாருக்கு பாத்தியப்பட்டு அனுபவத்தில் இருந்து அவர் இறந்த பின்னர் அவர் வாரிசுதாரரான 1ம் பிரதிவாதிதான் ஆண்டு அனுபவித்து வந்தார் என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி இவ்வழக்கில் உள்ள 4 முதல் 7 பிரதிவாதிகளுக்கு கிரையம் கொடுத்த விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும், சாட்சி

முதலில் தெரியாது, அதன் பின்னிட்டு 2011ம் ஆண்டுதான் தெரிய வந்தது என்று கூறினார். 1ம் பிரதிவாதிக்குதான் மேற்படி தாவா சொத்து உரிமை உள்ளது என்றாலும், அதன் பேரில்தான் 4 முதல் 7 வரையான பிரதிவாதிகளுக்கு கிரையம் கொடுத்தார் என்றால் சரியல்ல, சோமசுந்தர முதலியார் இடத்தை அனுபவிக்கவில்லை, இடம் எங்குள்ளது என்று தெரியாது, அவர் வந்து இடத்தை பார்த்ததும் இல்லை.

8. 1ம் பிரதிவாதி 4 முதல் 7 வரையான பிரதிவாதிகளுக்கு கிரையம் கொடுத்த பின்னர், பட்டா எண்.631ல் சோமசுந்தர முதலியார் பெயரை நீக்கி விட்டு முனுசாமி முதலியார் பெயருடன் 4 முதல் 7 வரையான பிரதிவாதிகள் பெயர்கள் கூட்டாக சேர்க்கப்பட்டது என்றால் சரிதான், வழக்கு நிலுவையில் உள்ள போதே அவர் கிரையம் கொடுத்தார். அதேப் போல் சர்வே எண்.127/1 என்பதை 127/1ஏ, 127/1பி என உட்பிரிவு செய்து 127/1ஏ என்பதை முனுசாமிக்கும், 127/1பி என்பதை 4 முதல் 7 பிரதிவாதிகளுக்கு என தனித்தனியாக பட்டா வழங்கப்பட்டுள்ளது என்றால் அதைப் பற்றி எனக்கு தெரியாது. 1ம் பிரதிவாதியிடமிருந்து 4 முதல் 7 பிரதிவாதிகள் கிரையம் பெற்றதிலிருந்து அவர்கள்தான் அனுபவித்து வந்தார்கள் என்றால் சரியல்ல.

9. 4 முதல் 7 வரையான பிரதிவாதிகள் அனுபவித்து வந்து அதன் பின்னர் பிரதிவாதிகள் 8 முதல் 11 வரையானவர்களுக்கு கிரையம் கொடுத்த ஆவணம்தான் தற்போது என்னிடம் காண்பிக்கப்படும் வா.சா.ஆ.61 என்றால் சரியல்ல. என்னிடம் காண்பிக்கப்படும் வா.சா.ஆ.61 ஆவணம் என்ன என்றாலும், யார் யாருக்கு எழுதி கொடுத்த ஆவணம் என்றால் சாட்சி ஆவணத்தை பார்த்து விட்டு சேகர் மகன் பாண்டியன், துரைராஜ் மகன் பாலாஜி, ஆத்மலிங்கம் மகன் ரஞ்சித்குமார், தனேஷ்குமார் மனைவி காயத்ரி ஆகிய நால்வருக்கும், துரைராஜ், சேகர், ஆத்மலிங்கம் மற்றும் தனேஷ் ஆகியோர் எழுதி கொடுத்த கிரைய பத்திரம் ஆகும். ஆகையால் பிரதிவாதிகள் 8 முதல் 11 வரையானவர்கள்தான் மேற்படி தென்புற சொத்தை அனுபவித்து வருகிறார்கள் என்றால் சரியல்ல, ஆகையால் நாங்கள் எந்த காலத்திலும் அனுபவிக்கவில்லை என்றால் சரியல்ல.

10. தாவாவில் நிரந்தர தடையுத்தரவு கோரியுள்ள பரிகாரம் தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல. தாவா சொத்து பிரதிவாதிகள் 8 முதல் 11 வரையானவர்களுக்கு பாத்தியப்பட்டது என்றாலும், எங்களுக்கு பாத்தியப்பட்டது அல்ல என்பதால் தாவாவில் கோரியுள்ள விளம்புகை பரிகாரமும் தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல. பிரதிவாதிகள் 8 முதல் 11 வரையானவர்கள் கிரையம் பெற்று அனுபவித்து வந்தார்கள், ஆகையால் அவர்களுக்கு கிரையம் கொடுக்க முழு உரிமை உள்ளது என்றாலும், அதை தடை செய்ய கோரிய பரிகாரம் தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல. வருவாய் துறை

அலுவலகத்தில் சரியான முறையில் விசாரணை நடத்தி பட்டாக்களை பிரதிவாதிகள் 4 முதல் 7 வரையானவர்களுக்கு பட்டா வழங்கியுள்ளதால் பட்டா பெயர் மாற்றம் கோரிய பரிகாரமும் தள்ளுடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல.

11. வழக்கு நிலுவையில் இருக்கும் போது நீதிமன்றத்திலிருந்து வழக்கறிஞர் ஆணையரை நியமிக்க தாக்கல் செய்த மனு தள்ளுபடி ஆனது என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது. மனு தள்ளுபடியான விவரம் எனக்கும், என் அண்ணன செல்வத்திற்கும் தெரியும் என்றாலும், மேல்முறையீடு செய்தால் யார் அனுபவத்தில் உள்ளது என்று தெரிய வந்து விடும் என்பதால்தான் மேல் முறையீடு செய்யவில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்தில் என் தந்தைக்கும், என் தந்தையின் வாரிசுதாரர்களுக்கும் எந்த உரிமையும் இல்லை என்றாலும், தாவாவை தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல, என் தந்தைதான் அனுபவித்து வந்தார்.

**குறுக்கு விசாரணை முடிவடைந்தது.**

**நேரம் - 1.00**

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the Plaintiffs / Defendants and admitted by the witness to be correct.

District Munsif,
Arni